பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
13 05 2026 WEDNESDAY     6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்தியா விரைவான வளர்ச்சியை அடைந்திருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

2. நீட் தேர்வு வினாத்தாள் வெளியான விவகாரம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள சிபிஐ, விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளது.

3. முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு, தமிழக சட்டப்பேரவையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு கோருகிறது.

4. தமிழகத்தின் தென்மாவட்டங்கள் உட்பட பல்வேறு மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 82 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

>>>>><<<<<

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்தியா விரைவான வளர்ச்சியை அடைந்திருப்பதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

*புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பின் மாநாட்டில் நேற்று உரையாற்றிய அவர், எரிசக்தி துறையில் நாடு அடைந்துள்ள பல்வேறு முன்னேற்றங்களை எடுத்துரைத்தார்.*

*தற்போதைய உலகளாவிய ஸ்திரமற்ற சூழலிலும், எரிசக்தி துறையில் இந்தியா தொடர்ந்து வலுவான நிலையில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.*

*நாட்டில், மாற்று எரிபொருள் சார்ந்த எரிசக்தி திறன் 81 ஜிகாவாட் என்ற அளவிலிருந்து 288 ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளதாகவும், இது, 280 சதவீத வளர்ச்சி என்றும் அவர் தெரிவித்தார்.*

*நாடுமுழுவதும் மின்சாரத்தின் தேவை மிக அதிகஅளவை எட்டிய போதிலும், எவ்வித தடையும் இன்றி மின்விநியோகம் செய்யப்பட்டதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.*

>>>>><<<<<

*நீட் தேர்வு வினாத்தாள் வெளியான விவகாரம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்துள்ள சிபிஐ, விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளது.*

*கடந்த 3ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு வினாத்தாள், ராஜஸ்தானில் வெளியானதாக எழுந்த சர்ச்சையை தொடர்ந்து, அந்த தேர்வை ரத்து செய்து தேசிய தேர்வு முகமை நேற்று அறிவித்தது.*

*மேலும், இந்த விவகாரம் தொடர்பாக, மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப்பட்ட நிலையில், சிபிஐ அதிகாரிகள் தீவிர விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.*

*இந்நிலையில், இதில் தொடர்புடைய முக்கிய நபரான ஜெய்ப்பூரைச் சேர்ந்த மனீஷ் என்பவரை ராஜஸ்தான் சிறப்பு காவல்படையினர் கைது*

செய்துள்ளனர். இதுவரை 15 பேரை கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மனீஷை காவலில் எடுத்து விசாரணை நடத்த சிபிஐ திட்டமிட்டுள்ளது.

>>>>><<<<<

முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு, தமிழக சட்டப்பேரவையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு கோருகிறது.

நடந்து முடிந்த தேர்தலில் த.வெ.க. 108 இடங்களில் வெற்றிபெற்றது.

காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவுடன் த.வெ.க ஆட்சியமைத்தது.

இன்றைக்குள் சட்டப்பேரவையில் திரு. ஜோசப் விஜய் தலைமையிலான அரசு, பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து, இன்று நம்பிக்கை வாக்கு கோரும் தீர்மானத்தை முதலமைச்சர் பேரவையில் முன்மொழிவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

த.வெ.க-வுக்கு 120 உறுப்பினர்களின் ஆதரவு இருந்த நிலையில், திருப்பத்தூர் தொகுதியில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்ற அக்கட்சியின் உறுப்பினர் திரு சீனிவாச சேதுபதி, இன்றைய நம்பிக்கை வாக்கெடுப்பில் கலந்துகொள்ள சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்த தடையை எதிர்த்து, திரு சீனிவாச சேதுபதி உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

தற்போது த.வெ.க அரசுக்கு 119 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர்கள் திரு. எஸ்.பி. வேலுமணி, திரு. சி.வி. சண்முகம் உள்ளிட்ட அஇஅதிமுகவின் ஒரு பிரிவினர் த.வெ.க அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

முன்னாள் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை, முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் சந்தித்திருப்பது, அரசியல் நாகரீகத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு. தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று, தம்மை முதலமைச்சர் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

>>>>><<<<<

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தலைமையிலான இந்திய நாடாளுமன்ற உயர்நிலைக் குழுவினர் இன்று பூட்டான் செல்கின்றனர்.

மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட 51 பேர் கொண்ட இந்தக் குழுவினர், இந்தியா – பூட்டான் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், அந்நாட்டிற்கு செல்லவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இக்குழுவினர் தங்கள் பயணத்தின் போது, பூட்டான் மன்னர் மற்றும் பிரதமரை சந்தித்து பேசவுள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

>>>>><<<<<

நீலகிரி மாவட்டம், உதகையில், இந்த ஆண்டு மலர் கண்காட்சியை 5 நாட்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சி நாளை தொடங்கவுள்ள நிலையில், பல்வேறு வண்ண ரோஜா மலர்களால் விதவிதமான வடிவங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 38 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் பேரிஜம் ஏரிப் பகுதியில் காட்டு யானைகள் நடமாட்டத்தால், கடந்த 4 நாட்களாக சுற்றுலா பயணிகள் செல்ல வனத்துறை தடை விதித்திருந்தது.

யானைகள் இடம்பெயர்ந்துள்ளதால், இன்று முதல் பேரிஜம் ஏரிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – ராஜசேகரன் 30 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தென்மேற்கு வங்கக் கடலில், இலங்கைக்கு அருகே, நீடித்து வரும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென்தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகத்தைப் பொறுத்தவரை அடுத்த 4 நாட்களுக்கு இயல்பான வெப்பநிலையே தொடரும் என்றும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை

பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒரு சில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, மேற்குத்தொடர்ச்சி மலையில் பெய்து வரும் மழை காரணமாக, கோவை மாவட்டம், வெள்ளியங்கிரி மலைக்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் – ஹரிகரன் 30 செகண்ட்ஸ்)*

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

உகாண்டா அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற திரு. Yoweri Museveni, 7வது முறையாக அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

>>>>><<<<<

அமெரிக்காவும் இஸ்ரேலும் தங்கள் நாட்டின்மீது மீண்டும் தாக்குதல்களை தொடர்ந்தால், யுரேனியம் செறிவூட்டும் பணியை தொடங்குவோம் என்று ஈரான் அறிவித்துள்ளது.

>>>>><<<<<

வங்கிகள் முறைப்படுத்தும் சட்டத்தின் கீழ், மும்பை சர்வோதயா கூட்டுறவு வங்கியின் உரிமத்தை ரிசர்வ் வங்கி ரத்து செய்துள்ளது.

>>>>><<<<<

தமிழக அரசின் கொறடாவாக திரு. சபரிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

>>>>><<<<<

கோடை விடுமுறை, முகூர்த்த நாட்கள், வார விடுமுறை நாட்களை முன்னிட்டு, மாநிலம் முழுவதும் ஆயிரத்து 700 சிறப்பு பேருந்துகள்

இயக்கப்படும் என்று அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

>>>>><<<<<

நீலகிரி மாவட்டத்தில் மனித-விலங்கு மோதல்களை தடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வு கூட்டம், ஆட்சியர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புதன்கிழமை தோறும் நடைபெறும் மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் இன்று முதல் வழக்கம்போல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் 32 பள்ளிகளின் 415 வாகனங்களை வட்டார போக்குவரத்து அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

>>>>><<<<<

திருவள்ளூர், திருத்தணி, பொன்னேரி ஆகிய வருவாய் கோட்டங்களில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் உத்தரவிட்டுள்ளார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டம், வடக்கலூர் பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நேரடி நெல் கொள்முதல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் திருமதி. மிருணாளினி ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

திருச்சி - ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் கோவில் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான நம்பெருமாள் நெல் அளவை கண்டறியும் வைபவம் நேற்று விமரிசையாக நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 82 ரன் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியை வென்றது.

அஹமதாபாதில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்ற ஹைதராபாத் அணி கேட்டுக் கொண்டதன் பேரில், முதலில் விளையாடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 5 விக்கெட் இழப்புக்கு 168 ரன் எடுத்தது.

169 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஹைதராபாத் அணி, 14 புள்ளி 5 ஓவரில் 86 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சாய் சுதர்ஸன் 61 ரன்னும், வாஷிங்டன் சுந்தர் 50 ரன்னும் எடுத்து அந்த அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

ராய்ப்பூரில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில், மோகன்பஹான் - இண்டர்காஷி அணிகளுக்கு இடையே கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற போட்டி டிராவில் முடிவடைந்தது. இரு அணிகளும் கோல் எதுவும் போடவில்லை.

*>>>>><<<<<*

வ.உ.சி. துறைமுக ஆணைய கோப்பைக்கான மாநில சீனியர் ஆடவர் ஹாக்கி போட்டியில் தூத்துக்குடி, சென்னை, தஞ்சாவூர், அரியலூர் மாவட்ட அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

*>>>>>END<<<<<*